கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
53.	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1,365,39,87	..	1
54.	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	346,58,98	98,45,58	..
	பெருமொத்தம்	180,974,06,38	32,532,92,43	3,677,47,59

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2019 ஜூலை 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்-*தொடர்ச்சி*

(அ) **கோரிக்கை எண் 38–பொதுத் துறை**
(ஆ) **கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்**
(இ) **கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை**
(ஈ) **கோரிக்கை எண் 16–நிதித் துறை**
(உ) **கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**
(ஊ) **கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**
(எ) **கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையைத் தொடரலாம்.*